1975 ஏப்ரல் 3]

இருக்கிறார்கள். சூளைம்பேடு பஞ்சாயத்தில் 22 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இந்த பஞ்சாயத்துக்கள்தான் அதிகமான ஜனத்தொகை கொண்டவை என்று கருதப்படுகிறது. இவற்றை உடனடியாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இடைக்கழி நாடு பஞ்சாயத்தை ஏழாகப் பிரிப்பதற்கான திட்டம், அடுத்தது சூளைம்பேடு பஞ்சாயத்தை நான்காகப் பிரிப்பதற்கான திட்டம் நம்முடைய கலெக்டர் அவர்களிடம் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, வாக்காளர் பட்டியல் தயாரித்து முடிந்த பிறகுதான், இதை முடிவு செய்வார்கள்.

Social Education Centres.

* 554 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

whether there is any proposal under the consideration of the Government to accord sanction for grants for the opening of one Social Education Centre in each Panchayat?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமூகக் கல்வி நிலையம் அமைப்பதற்கு அரசு 1964-ம் ஆண்டிலேயே தக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, உத்தரவிருந்தாலும் இன்று பல பஞ்சாயத்து யூனியன்களில் ஒரு பஞ்சாயத்தில் ஒரு சோஷியல் எஜுகேஷன் சென்டர் இல்லா நிலைமை இருக்கிறது. அதோடு, இன்று ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சோஷியல் எஜுகேஷன் விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். ஆனால் அவருக்கு வேறு வேலையில்லாமல் இருக்கிறது. சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையானது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு தினசரி (நியூஸ் பேப்பர்) வாங்குவதற்குக் கூட அந்தத் தொகை போதுமானதாக இல்லை. அரசு பிறப்பித்த உத்திரவை நடைமுறைப்படுத்துவதற்கும், சோஷியல் எஜுகேஷனுக்குக் கொடுக்கின்ற தொகையை அதிகரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தமிழ் நாட்டில் 12,632 ஊராட்சிகளும், 591 பேரூராட்சிகளும் இருக்கின்றன. இவற்றில் 13,362 சமூகக் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. அதிகமாகவே இருக்கின்றன. ஒரு சில இடங்களில் இல்லை என்று சொன்னார்கள். கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு கூட்டு மன்றத்திற்கும் ரூபாய் 800 இதற்கான செலவுக்குச் சன்மானமாக சர்க்கார் கொடுக்கின்றது. இதுவே போதுமானது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் சமூக நல ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தரத்தை கிராம நல ஊழியர்களுடைய தரத்திற்குச் சமமாக உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைப் பற்றி பிறகு ஆலோசிக்கலாம்.

வில்லியர் காலனி கிராமத்தில் தெரு விளக்குகள்

*555 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ரெட்டம்பேடு ஊராட்சியில் உள்ள வில்லியர் காலனி கிராமத்தில் தெரு மின்விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏன் ?

(இ) இது எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தின் வேறு பகுதிகளில் அமைக்கப் பட்டு எரியும் மின்விளக்குகளுக்கான எரி கட்டணம் நிலுவையில் இருப்பதால், மேலும் அதிகப்படியான மின்விளக்குகள் அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் விதிமுறைகள் இடம் தரவில்லையென்று மின்வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் கூறியுள்ளார். மின்சார வாரியத்திற்கு சேர வேண்டிய எரிகட்டண தொகையை உடனே செலுத்தி, அதற்கான ரசீதை பொன்னேரியிலிருக்கும் மின்சார வாரிய உதவிப் பொறியாளரிடம் தாக்கல் செய்து, ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த